பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**25 11 2025** **TUESDAY** **6.30 PM**

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

**1)** கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களுக்கு உட்பட்ட ஓரிரு இடங்களில் அடுத்த **24** மணிநேரத்தில் கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**2)** கனமழை எச்சரிக்கையையடுத்து, சென்னை, கடலூர், காஞ்சிபுரம், மற்றும் டெல்டா மாவட்ட நிர்வாகங்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தமிழக அரசு அறிவுறுத்தியுள்ளது.

**3)** மகளிருக்கு அதிகாரமளித்தால் மட்டுமே சமூகம் முன்னேற்றமடையும் என்று மத்திய அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

**4)** கோவையில் முதலீட்டாளர்கள் மாநாட்டை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கிவைத்தார்.

**5)** தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வெற்றிபெற **549** ரன் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

-- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>>

தமிழகத்தின் கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களுக்கு உட்பட்ட ஓரிரு இடங்களில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

இன்று எமது செய்தியாளரிடம் பேசிய அவர் இவ்வாறு கூறினார்.

**(*Sound Byte — செந்தாமரை கண்ணன் (1) —44 Sec.* )**

தமிழக கடலோர பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் சூறாவளி காற்று வீசக்கூடும் என்பதால் அடுத்த இரண்டு நாட்களுக்கு மீனவர்கள் கடலுக்கு செல்ல வேண்டாம் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரை கண்ணன் அறிவுறுத்தினார்.

***(Sound Byte — செந்தாமரை கண்ணன் (2)—42 Sec. )***

மலாக்கா கடற்பகுதியில் நிலவும் காற்றழுத்த தாழ்வுப் பகுதி, காற்றழுத்த தாழ்வு மண்டலமாக தீவிரமடைந்து, புயலாக வலுப்பெறக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

இதனிடையே, தூத்துக்குடி வ உ சி துறைமுகத்தில் மூன்றாம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது.

இந்நிலையில், காற்றழுத்த தாழ்வுப்பகுதி, தமிழகத்தை நோக்கி நகரக்கூடும் என்பதால், சென்னை, கடலூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், விழுப்புரம், திருவள்ளூர் மற்றும் டெல்டா மாவட்டங்களில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட ஆட்சியர்களுக்கு மாநில அரசு அறிவுறுத்தியுள்ளது.

சென்னையில் உள்ள ஒருங்கிணைந்த வெள்ள மேலாண்மை மையத்திலிருந்து வருவாய் நிர்வாக ஆணையர் திரு சாய்குமார், காணொலி காட்சி மூலம், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர்களுடன் பேரிடரை எதிர்கொள்வதற்கான முன்னெச்சரிக்கைகள் மற்றும் ஆயத்த நிலைகள் குறித்து ஆலோசனை மேற்கொண்டார்.

இதில், நிவாரண மையங்களை தயார் நிலையில் வைத்துக்கொள்ளுமாறும், நேரடி கொள்முதல் மையங்களிலிருந்து அனைத்து நெல் மூட்டைகளையும் பாதுகாப்பாக கொண்டு செல்லுமாறும், கூடுதல் மின் கம்பங்கள், மின் வடங்கள், தயார் நிலையில் வைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தமிழ்நாடு பேரிடர் மீட்புப்படையின் மூன்று அணியினர் நாகை மாவட்டம் வேளாங்கண்ணிக்கும், இரண்டு

அணியினர் கடலூர் நகராட்சிக்கும் அனுப்பப்பட்டுள்ளதாக தமிழக அரசு கூறியுள்ளது.

மேலும், தேசிய பேரிடர் மீட்புப்படையின் ஒரு அணி விழுப்புரம் மாவட்டத்திற்கு அனுப்பபட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநில அவசரகால செயல்பாட்டு மையம் மற்றும் மாவட்ட அவசரகால செயல்பாட்டு மையங்கள் மூலம் நிலைமை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருவதாக மாநில அரசு இன்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

கோவையில் முதலீட்டாளர்கள் மாநாட்டை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கிவைத்தார்.

இந்நிகழ்ச்சியில் 43 ஆயிரத்து 844 கோடி ரூபாய் முதலீட்டில் 158 தொழில் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தானது.

இதனால், ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டோருக்கு வேலைவாய்ப்பு உருவாகும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

<<<<<>>>>>>

டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு திமுக அரசு துரோகம் செய்துவிட்டதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி குறை கூறியுள்ளார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு கொண்டுவந்த நெல்லை உடனுக்குடன் கொள்முதல் செய்யாததால், மழையில் நனைந்து வீணாகிவிட்டதாக கூறியுள்ளார்.

கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகளை உரிய நேரத்தில் சேமிப்புக்கிடங்குகளுக்கு கொண்டு செல்லாததாலும், தேவையான அளவு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை திறக்காததாலும் விவசாயிகளுக்கு பேரிழப்பு ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

நெல் ஈரப்பதத்திற்கான வரம்பை உயர்த்த உரிய நேரத்தில் செயல்பட்டு மத்திய அரசின் ஆணையை பெற, மாநில அரசு தவறிவிட்டதாக திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

<<<<<>>>>>>

மகளிருக்கு அதிகாரமளித்தால் மட்டுமே சமூகம் முன்னேற்றமடையும் என்று மத்திய ஊரக மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று பாலின சமத்துவம் மற்றும் பெண்களுக்கு அதிகாரமளித்தல் தொடர்பான விழிப்புணர்வு இயக்கத்தை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

நாட்டின் வளர்ச்சிக்கு மகளிரின் பொருளாதார மேம்பாடு அவசியம் என்று கூறிய திரு சிவ்ராஜ் சிங் சௌகான், நமது கலாச்சாரத்தில் பாலின சமத்துவம் முக்கிய என்று தெரிவித்தார்.

<<<<<>>>>>>

நாகை மாவட்டம் நாகூர் ஆண்டவர் தர்காவின் 469-ஆவது ஆண்டு கந்தூரி விழா கடந்த 21-ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது.

இந்த விழாவின் முக்கிய நிகழ்ச்சியான சந்தனம் பூசும் நிகழ்வு வரும் 30-ஆம் தேதி தொடங்குவதையொட்டி, இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பாரம்பரிய முறைப்படி நடைபெற்று வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(Sound Byte — செல்வன் ஜெபராஜ் — 48 Sec. )*

இவ்விழாவையொட்டி, சென்னை எழும்பூரிலிருந்து, நாகை வழியாக வேளாங்கண்ணிக்கு வரும் 30-ஆம் தேதி சிறப்பு ரயில் இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

தூத்துக்குடி மாநகராட்சியில் பல்வேறு பகுதிகளில் தேங்கியுள்ள மழைநீரை அகற்றும் பணியை மாநில அமைச்சர் திருமதி கீதா ஜீவன் இன்று நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

----------------

பெண்களின் முன்னேற்றத்திற்கு சிறந்த சேவை புரிந்தமைக்காக வழங்கப்படும் ஔவையார் விருதுக்கு தகுதியுடையவர்கள் **awards.tn.gov.in** என்ற இணையதளத்தில் அடுத்த மாதம் **31**-ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என்று நாமக்கல் மாவட்ட ஆட்சியர் திருமதி துர்காமூர்த்தி தெரிவித்துள்ளார்.

----------------

நாமக்கல் மாவட்டத்தில் பூர்த்தி செய்யப்பட்ட வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்படிவங்களை, சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடி மையங்கள் மற்றும் நியாயவிலைக்கடைகளில் வழங்குமாறு மாவட்ட தேர்தல் அலுவலர் திருமதி துர்காமூர்த்தி தெரிவித்துள்ளார்.

--------------

சேலத்தில் 23 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டுவரும் மூக்கனேரியில் தமிழக சட்டப்பேரவை பொது கணக்குக்குழு தலைவர் திரு செல்வப்பெருந்தகை தலைமையிலான உறுப்பினர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிகெட் போட்டியின் நான்காம் நாள் ஆட்டநேர இறுதியில் இந்தியா தனது இரண்டாவது இன்னிங்சில் 2 விக்கெட் இழப்பிற்கு 27 ரன் எடுத்துள்ளது.

குவஹாத்தியில் நடைபெற்று வரும் இப்போட்டியில் தென்னாப்பிரிக்கா இரண்டாவது இன்னிங்சில் 5 விக்கெட் இழப்பிற்கு 260 ரன் எடுத்திருந்த நிலையில் டிக்ளர் செய்தது.

இந்தியா வெற்றிபெற 549 ரன் என்ற இலக்கை தென்னாப்பிரிக்கா நிர்ணயித்துள்ளது.

தென்னாப்பிரிக்கா முதல் இன்னிங்ஸில் 489 ரன்னும், இந்தியா 201 ரன்னும் எடுத்துள்ளன.

-------------

ஆஸ்திரேலியா சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் **Karan Singh** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், **5-7, 6-4, 6-3** என்ற செட் கணக்கில், ஜப்பானின் **Kokoro Isomura-**வை வென்றார்.

**<<<<<END>>>>>>**